யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூலை - 2015

FWC

# Term Examination, July - 2015

| தரம் :- 12 (2016) | வணிகக்கல்வி | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **01 - 15 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**
- **16 - 25 வரையுள்ள விளாக்களுக்குரிய சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. வணிகங்கள் வெற்றிகரமானதாகக் காணப்படுவது பெரும்பாலும் அவை
   (1) உயர்ந்த இலாபத்தை உழைக்கும் போது
   (2) உயர்தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் போது
   (3) மிகச்சிறந்த ஊழியர்களை சம்பளத்திற்கு அமர்த்தும் போது
   (4) சமூகத்திற்குச் சில பங்களிப்புக்களை மேற்கொள்ளும் போது
   (5) மக்கள் விரும்புகின்ற பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்யும்போது (………..)

2. பின்வரும் அட்டவணையில் X நிரலில் பேரினச் சூழல் காரணிகளும் Y நிரலில் அதனுடன் தொடர்புடைய சில செயற்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A – தொழில்நுட்பச்சூழல் | 1. உள்நாட்டுக் கலாசாரத்தில் பாதகமான மாற்றங்கள் ஏற்படுதல். |
| B – சமூக கலாசாரச் சூழல் | 2. அடுத்த மாதம் சமையல் வாயுவின் விலை உயரும். |
| C – அரசியல் சட்டச் சூழல் | 3. உற்பத்தித் துறையில் றோபோ இயந்திரம் |
| D – பூகோளச் சூழல் | 4. முதியோரை நினைவுகூரும் விசேட நிகழ்வு |
| E – பொருளாதாரச் சூழல் | 5. உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கை |

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவுசெய்க.

(1) A 1, B 4, C 2, D 5, E 3 (2) A 3, B 1, C 5, D 2, E 4 (3) A 3, B 1, C 5, D 4, E 2
(4) A 3, B 4, C 5, D 1, E 2 (5) A 5, B 1, C 2, D 3, E 4 (………..)

3. பின்வரும் அட்டவணையில் X நிரலில் அக்கறையுடைய தரப்பினரும் Y நிரலில் சமூகப் பொறுப்புக்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A – உரிமையாளர் | 1. நியாயமாக இருத்தல் |
| B – ஊழியர் | 2. நியாயமான வருமானம் |
| C – வாடிக்கையாளர் | 3. வாக்குறுதியை நிறைவேற்றல் |
| D – சமூகம் | 4. சமூகநலனோம்புச் சேவைகள் |
| | 5. சமமாக நடத்தும் தன்மை |
| | 6. கழிவுப்பொருள் முகாமைத்துவம் |
| | 7. நேர்மையான முகாமைத்துவம் |
| | 8. சுகாதார பாதுகாப்பு வசதிகள் |

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவுசெய்க.

(1) A – 1, 2, B – 3, 5, C – 4, 6, D - 7, 8
(2) A – 2, 7, B – 5, 8, C – 1, 3, D - 4, 6
(3) A – 2, 7, B – 4, 5, C – 1, 3, D - 6, 8
(4) A – 2, 7, B – 1, 8, C – 3, 4, D - 5, 6
(5) A – 1, 2, B – 7, 8, C – 3, 4, D - 5, 6 (………..)

4. வணிகத்தை வகைப்படுத்தும் நியதி அல்லாதது எது?

(1) உற்பத்தித் தன்மை அடிப்படையில்
(2) உற்பத்தித் துறை அடிப்படையில்
(3) அளவின் அடிப்படையில்
(4) நோக்கத்தின் அடிப்படையில்
(5) வாழ்தன்மை அடிப்படையில் (………..)

5. பின்வரும் அட்டவணையில் X நிரலில் வணிகக் கருமங்களும் Y நிரலில் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் விளைவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A – உற்பத்தி | 1. வாடிக்கையாளரின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவுசெய்தல் |
| B – நிதி | 2. ஆவணங்களைப் பராமரித்தல், தொடர்பாடல் கருமங்கள் |
| C – நிர்வாகம் | 3. வளங்களைப் பொருட்கள் அல்லது சேவைகளாக மாற்றுதல் |
| D – சந்தைப்படுத்தல் | 4. ஆட்சேர்ப்பு, தெரிவுசெய்தல், இணைத்துக்கொள்ளல் |
| E – மனிதவளக் கருமங்கள் | 5. நிதியீட்டலும் ஈடுபடுத்தலும் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகள் |

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவுசெய்க.

(1) A – 1, B – 2, C – 5, D - 3, E - 4
(2) A – 1, B – 5, C – 2, D - 3, E - 4
(3) A – 3, B – 5, C – 2, D - 1, E - 4
(4) A – 3, B – 5, C – 1, D - 2, E - 4
(5) A – 1, B – 2, C – 3, D - 4, E - 5 (………..)

The National e-learning Portal for The General Education

6. இலங்கை மத்திய வங்கியினால் கடன்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சில முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - வட்டிவீதம்
B - கடன்களுக்கான உச்ச முதிர்வுக்காலம்
C - நாணயக் கடிதத்திற்கு எதிரான காசு எல்லை
D - சட்ட ஒதுக்கு வீதம்
E - திறந்த சந்தை நடவடிக்கை
F - தார்மீக வேண்டுகோள் விடுத்தல்

மேற்கூறிய முறைகளில் பண்புமுறைக் கடன்கட்டுப்பாட்டு முறையினை மட்டும் கொண்ட சரியான விடைத்தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) B, C மற்றும் F
(2) A, B மற்றும் E
(3) B, D மற்றும் F
(4) C, D மற்றும் F
(5) B, D மற்றும் E (………..)

7. வணிகச் செயற்பாடுகளில் அரசாங்கம் தலையிடுவதன் முக்கிய நோக்கம்

(1) அரசாங்கத்திற்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளுதல்
(2) அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிகங்களைப் பாதுகாத்தல்
(3) மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்
(4) செல்வத்தையும் வருமானத்தையும் நியாயமாகப் பகிர்தல்
(5) சமப்படுத்திய வரவுசெலவுத் திட்டத்தைப் பேணுதல் (………..)

8. பங்குடைமை வணிகத்தில் பங்காளர்களின் ஒரு கடமை
(1) வணிக நடவடிக்கையில் கலந்துகொள்ளுதல்
(2) வணிக கருமங்களில் ஈடுபாட்டுடன் கலந்துகொள்ளல்
(3) வணிகத்தின் கணக்குகளை அறிந்துகொள்ளல்
(4) இலாபங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்
(5) இட்ட மூலதனத்திற்கு வட்டி பெறுதல் (………..)

9. பின்வரும் அட்டவணையானது சில வணிக நிறுவனங்களையும் அவற்றுடன் தொடர்புபட்ட பண்புகளையும் தருகின்றது.

| வணிக நிறுவனங்கள் | பண்புகள் |
|---|---|
| A – கூட்டுறவு | 1. வணிக முயற்சி ஒன்று இருத்தல் |
| B – தனியுடைமை | 2. இடருக்குத் தனியாக முகம் கொடுத்தல் |
| C – வரையறுத்த கம்பனி | 3. நிறுவனச் சுற்றறிக்கைகள் நிதிச்சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படல் |
| D – பங்குடைமை | 4. ஒரு அங்கத்தவருக்கு ஒரு வாக்கு |
| E – அரச திணைக்களம் | 5. நீடித்த வாழ்வு |

வணிக நிறுவனங்களுக்கும் அவற்றுடன் தொடர்புடைய பண்புகளுக்கும் சரியாகப் பொருந்துகின்ற இணைப்பைத் தெரிவுசெய்க
(1) A – 4, B – 2, C – 5, D - 1, E - 3
(2) A – 5, B – 1, C – 4, D - 2, E - 3
(3) A – 4, B – 1, C – 5, D - 2, E - 3
(4) A – 2, B – 1, C – 3, D - 4, E - 5
(5) A – 4, B – 2, C – 1, D - 5, E - 3 (………..)

10. சிற்றளவு வணிகம் ஒன்றின் சிறப்பியல்பாக ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றைத் தெரிவு செய்க.
(1) பெரும்பாலும் நிறுவன உரிமையாளரே முகாமையாளராகச் செயற்படுவது.
(2) நவீன தொழில்நுட்பப் பயன்பாடு குறைவாக இருத்தல்.
(3) பெரும்பாலும் உள்நாட்டில் காணப்படும்.
(4) முழுக் கைத்தொழிலும் ஒரு சிறிய விகிதாசாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.
(5) முதலீட்டுடன் ஒப்பிடும் போது கிடைக்கும் இலாபமானது தாழ்வான ஒரு மட்டத்தில் இருத்தல்.
(………..)

11. A - கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் B - குத்தகைக் கம்பனிகள்
C - காப்புறுதிக் கம்பனிகள் D - முதன்நிலை வணிகர்கள்
E - நிதிக் கம்பனிகள் F - கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள்
மேலே குறிப்பிட்டவற்றுள் இலங்கையில் உள்ள விசேட நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A, B, C (2) B, C, D (3) B, D, F
(4) D, E, F (5) C, D, F (………..)

12. பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கியின் ஒரு பிரதான கருமம் அல்லாதது எது?
(1) நாணயங்களை வெளியீடு செய்தலும் பங்கீடு செய்தலும்
(2) அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு
(3) நாணயக் கொள்கைகளை அமுல்படுத்துதல்
(4) வங்கிகள் நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்
(5) நாணயக் கொள்கைகளை அமுல்படுத்தல் (………..)

13. காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு நட்டஈட்டுக் கோரிக்கை மறுக்கப்படுவதற்குக் காரணமான காப்புறுதித் தத்துவம் எது?
(1) காப்புறுதி தெய்தகு நலன் (2) மிக்குயர் நம்பிக்கை (3) இழப்பீடு
(4) பதிவாள்வைப்பு (5) பங்களிப்பு (………..)

14. வாய்மூலமான தொடர்புகொள்ளலில் ஏற்படும் ஒரு நன்மை அல்லாதது எது?
    (1) செய்தியை வழங்கியவுடனே பிரதிபலிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.
    (2) இரகசியமாகத் தகவலை முன்வைக்க முடியும்.
    (3) செய்தி பெறுபவரின் தன்மையைப் பொறுத்து செய்தியை அனுப்ப முடியும்.
    (4) செய்தியானது அனுப்பப்பட்டுவிட்டது என்பதை உறுதிப்படுத்த முடியும்.
    (5) தகவலை வழங்குபவரும் பெறுபவரும் நேரடியாகத் தொடர்புபடல் (………..)

15. பின்வருவனவற்றுள் ஆசியான் (ASEAN) அமைப்பின் உறுப்பு நாடுகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது?
    (1) மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் புருணை
    (2) புருணை, பூட்டான், சிங்கப்பூர், மலேசியா மற்றும் இலங்கை
    (3) மலேசியா, தாய்லாந்து, இந்தியா, மாலைதீவு மற்றும் கம்போடியா
    (4) கம்போடியா, பூட்டான், மாலைதீவு, வியட்நாம் மற்றும் லாகோஷ்
    (5) புருணை, பூட்டான், இந்தியா, மலேசியா மற்றும் தாய்லாந்து (………..)

- 16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

16. (அ) ................................................. மற்றும் ........................................... என்பன ஒரு உற்பத்திப் பொருள் தொடர்பாகக் கேள்வியை உருவாக்கும் இரு காரணிகள் ஆகும்.

    (ஆ) உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் பொருள் ............................................... எனப்படும்.

17. (அ) பொருளாதாரச் சூழல் காரணிகளுடன் தொடர்புடைய பேரினச்சூழல் காரணிகள் இரண்டாக ................................................, ............................................................... ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

    (ஆ) ..................................................... மற்றும் ........................................................... என்பன பங்கு ஒப்புறுதி சேவையை வழங்கும் இரு நிதி நிறுவனங்களாகும்.

18. (அ) ஒரு உற்பத்தியாளரது பொருட்களை மட்டும் விற்பனை செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ள வியாபார நிலையங்கள் .......................................................... என அழைக்கப்படும்.

    (ஆ) இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறக்கூடிய இரு முறைகளாக ..........................................................., ....................................................... என்பவற்றைக் குறிப்பிடலாம்.

19. (அ) 1..........................................................................., 2.......................................................................... என்பவை அனுமதிப்பத்திரம் பெற்ற இரு வர்த்தக வங்கிகளாகும்.

    (ஆ) அங்கத்தவர்களின் வைப்புக்களை மாத்திரம் ஏற்று அவர்களுக்குக் கடன் வழங்கும் நிறுவனம் ........................................................................................................................ என அழைக்கப்படும்.

20. (அ) வணிகங்களின் செயற்பாடுகளில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துவனவாக............................... ......................................................., ............................................................. என்பவற்றைக் குறிப்பிடலாம்.

    (ஆ) பங்குவழங்கல் மேற்கொள்ளாத ஒரு கம்பனி .................................................................................. என அழைக்கப்படுவதுடன், பங்குகளைப் பகிரங்கமாக வெளியீடு செய்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ள ஒரு கம்பனி .................................................... என அழைக்கப்படும்.

- **21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

21. நுகர்வோரின் பொறுப்புக்கள் நான்கினை எழுதுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

(3) ..........................................................................................

(4) ..........................................................................................

22. பங்குடைமை வணிகத்தின் சிறப்பான பண்புகள் நான்கினை எழுதுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

(3) ..........................................................................................

(4) ..........................................................................................

23. (அ) சிறிய வணிகங்களுக்கு தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் இரண்டினைப் பெயரிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

(ஆ) ஆயுள்காப்புறுதி தொடர்பாக உரித்தற்ற காப்புறுதிக் கொள்கைகள் இரண்டினை எழுதுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

24. (அ) இலங்கை வணிக நிறுவனங்களில் பரந்தளவில் பயன்படுத்தப்படும் உள்ளகத் தொடர்பாடல் வகைகள் நான்கினைப் பெயரிடுக.

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

(3) ..........................................................................................

(4) ..........................................................................................

(ஆ) பயணிகளுக்கான தேசிய போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த உருவாக்கப்பட்ட அரச அமைப்பு எது?

..........................................................................................

25. (அ) முதல்வரின் சார்பாகப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தலை மேற்கொள்ளும் முகவரின் பெயர் யாது?

..........................................................................................

(ஆ) வெளிநாட்டு வியாபாரத்துக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளாக 1. ..........................................

2.................................................. 3.................................................. 4..................................................

ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

(25 x 2 = 50 புள்ளிகள்)